நூல் நயம் :




# அகலாது அமர்ந்துவிட்ட அருந்தவம்!

ஆத்திகச் சூழ்நிலையில் தோன்றி, காலத்தின் கோலத்தால் நாத்தழும்பேற நாத்திகம் பேசி நின்ற ஓர் கவிஞர், கடவுளை மேலும் விமர்சிக்க நாடியது ராம காதையை. ஆனால் கம்பனின் தமிழும், அக்கதாநாயகனின் அமிழ்தனைய குணங்களும் கவிஞரை புரட்டிப் போட்டன. 'கிண்டல்' செய்யப் புறப்பட்டவர், அண்டர் நாயகனிடம் தண்டனிட்டார். அவரை ஈர்த்தது ராம பிரான் ஆயினும், இறைமையில் சேர்த்தது கண்ணனின் காருண்யமே! அவரே கவியரசர் கண்ணதாசன்!

இப்படி எத்தனையோ மாந்தர்களின் வாழ்வினைப் புரட்டிப் போட்டுள்ளன ராம காதையும், கிருஷ்ண கீதையும்! அந்த வரலாறு தொடர்கிறதென்பதற்கு நவீன உதாரணம், பள்ளத்தூர் பழ. பழனியப்பன்.

'காசு' புழங்கும் வங்கித் துறையில், மாசு படாது பணியாற்றிக் கொண்டிருந்த பழனியப்பனை ஆசுகவி கம்பன் கவர்ந்திழுத்துக் கொண்டான். பன்னிருகை வேலவனின் படை வீடுகளுள் ஒன்றன் பெயரை உடைய இவர், பன்னிரண்டாண்டுகள் 'கம்ப சாகரத்தில்' மூழ்கித் திளைத்தார். முத்துகளும், பவளங்களும், கொத்துக் கொத்தாக மீனினங்களும் இருப்பினும் உப்புள்ளது சாகரம். கம்ப சாகரமோ ஒவ்வொரு திவலையும் தித்திக்கும் தன்மையுடையது. மேலும் அதில் கருத்துக் கருவூலங்கள் பலவும் ஆழ்ந்து கிடக்கின்றன. மூச்சொடுக்கத் தெரியாதாருக்கு முத்துக்கள் இல்லை. தகுந்த கல்வி என்னும் வீச்சுடையார் மட்டுமே ராம காதையின் ரசத்தினை முழுதுமாய் ரசித்திட முடியும்; 'ஆழ்ந்து கிடக்கும் கவியுளம்' காணவும் முடியும்!

இன்றோ 'டமில்' கூறும் நல்லுலகம், ராம காதையின் மூலத்தை மட்டும் தரின் மூலையிலே போட்டுவிட்டு முடங்கும். நற்றமிழைப் பயின்றார்க்கும் 'உரை' என்பது இல்லாவிடின், பல பாடல்களில் பதுங்கியுள்ள நிறைவான கருத்துகள் முழுதும் புலப்படாமல் 'உறைகின்ற' நிலையும் உருவாகலாம். அப்படி உறைவாருக்கும், காவியமெனில் சுவரின் பின் மறைவாருக்கும் கம்ப ரசத்தின் சுவை முழுவதையும் காட்டிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டு புறப்பட்டிருக்கிறார் பள்ளத்தூர் பழ. பழனியப்பன். கம்பராமாயணப் பாடல்கள் அனைத்திற்கும் விரிவான உரையெழுதி, தமிழ்த் தொண்டு செய்த-செய்து வரும் சான்றோர்களின் அரியாசனங்களுக்கு மத்தியில் சரியாசனம் பெற்றுவிட்டார் இந்த மாமனிதர்.

**'சொல் நலமும், பொருள் நலமும் சுவை கண்டு, சுவை கண்டு, துய்த்துத் துய்த்து, கன்னலிலே சுவையறியும்**